புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
வைகாசி௴ உ௯உ
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5 00
,,	கால்கலம்	ரூ. 3 15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி௵ தை௴ உகூஉ (1924 பிப்ர்வரி 11) திங்கட்கிழமை, { இலக்கம்—௬௧.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிழு அணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்!
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

புத்தக விளம்பரம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது)	க0
இரண்டாம் பாலபாடம் ,,	க௫
மூன்றும் பாலபாடம் ,,	உ0
நான்காம் பாலபாடம்	௩0
ஐந்தாம் பாலபாடம்	௪0
ஆறும் பாலபாடம்	௫0
கலாமஞ்சரி விளக்கத்துடன்	௭௫
கிருட்டிணன் றாது, உரையுடன்	௮௫
நமச்சிவாயமாலை, உரையுடன்...	௩
ஆத்திசூடி	௩
வெற்றிவேற்கையுரை	௩
வாக்குண்டாமுரை	௩
நல்வழியுரை	௩
நன்னெறியுரை	௩
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)...	கஉ
இலக்கண வினவிடை...	க0
நிகண்டு கக-வதும் கஉ-வதும் ...	உ௫
திருவாதவூரடிகள்புராண மூலம் ...	உ௫
திருச்செந்தூர்ப்புராணவுரை	
கிளேஸ்காகிதம்	க-உ௫
றவ்காகிதம்...	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்	க0
கந்தசஷ்டி கவசம்	௩
சுப்பிரமணியசுவாமி விருத்தம் ...	௩
ஆறுமுகசுவாமி விருத்தம்... ...	௩
பிள்ளையார்கதை	கஉ
கதிரைமலைப் பேரின்பக்காதல் ...	கஉ
பிரபஞ்சப் பெருவழக்கு	க0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்?	க0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு)	௬
குமணசரித்திரம் ,,	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௩
சோமவாரவிரதமான்மியம்...	க0
கந்தவிரதமான்மியம்	க0
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு)	க௫
மறைசையந்தாதி	உ0

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வி. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றுனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வி. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்த வீரியசக்தி குறையாத இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய அமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சசப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினல் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லைட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது. சேலை 1க்கு ரூ. 45 முதல் ரூ. 100 வரை.

கத்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்சு ஜரிகையினுல் கொடி செடி வேலைபுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்சு உயர்ந்த ஜரிகையினுல் பூ வேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரூ. 80 முதல் ரூ. 150 வரை.

"கேட்லாக்" இனும். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

Silk Pitamber Coy.,
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27.)

காகிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5¾ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் நைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென் மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
அறைக்கீரைவிரைத்தைலம்.

Arakeerai Virai Thailum
V. SAMMY AYENGAR'S
TRADE MARK.
அறைக்கீரைவிரைத்தயிலம்

இதன் குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனுற் கண்மறைபபு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காதுஇரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்குய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். சோமநாதம்மாள்,
மானியுபாச்சுரர்,
8. பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி௵
தை௴ 29௳ திங்கட்கிழமை.

கைவிட்டோம்!
கவலைப் படுகிறோம்!!

உலகத்திலுள்ள தொழில்களாகிய வியாபாரம், உத்தியோகம், கைத்தொழில் சிற்பம், சோதிடம், வைத்தியம் முதலான எல்லாவற்றிலும்பார்க்க மிகச் சிறந்தது கமத்தொழிலாகும். இக் கமத்தொழில் பண்டைக் காலத்திலே மிகச் செழிப்புற்று மேலான நிலையிலிருந்தது. அக்காலத்தி லுள்ளவர்கள் அதனை பொன்னெனப் போற்றியும் கண்ணெனக் காப்பாற்றியும் வந்தனர். அக்காலத்தவருடைய சதா சிந்தனையும் செய்கையும் கமத்தொழிலிலே பதிந்திருந்தன. பணப்பயித்தியம் பிடித்தோரைக் காண்டல் மிக அரிதாயிருந்தது. கமத்திற் செய்யப்படுவன எல்லாம் சமயக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தன. கமத்தில் விளைந்த நெல் முதலிய தானியங்களைக் கொடுத்தலும் வாங்குதலும் சுபதினங்களிலே நடைபெறச் செய்யும் நியதியிருந்தது. தானியங்களை இலட்சுமி எனப் போற்றி வந்தனர். ஏர்மங்கலம், நெல்விதைத்தல், புதிதெடுத்தல், புதிதுண்ணல், சூடுமிதித்தல் முதலியன சிறப்பாகவும், சமய விஸ்வாசத்துடனும் செய்யப்பட்டன. நெல் பொலியெனவும், வைக்கோல் பொலிக்கொடியெனவும், மாடுகள் நடையன்களெனவும், தண்ணீர் காவேரியெனவும் விசேஷ நாமங்களினால் அழைக்கப்பட்டு வந்தன. அக் கமக்காரருக்கு ஒரு வருஷம் முழுவதும் வேண்டிய உபகரணங்களைச் செய்து கொடுக்கும் தொழிலாளரெல்லாருக்கும் சூடு மிதிக்கப்படும் காலத்திலேயே கூலியாக நெல்கொடுபட்டு வந்தது. இதனாலே பணத்தைப்பற்றியஉபபோகம் மிகக் குறைவாகஇருந்தது. மாதமும்மாரிபெய்துவந்தமையினாலும், வேண்டிய வேண்டிய இடங்களிலே அக்கால அரசினர் அநேக கட்டுக் குளங்களை அமைத்திருந்தமையினாலும் வேளாண்மை சிறப்புற்று விளங்கியது. ஏர்மங்கலம் அதாவது முதன்முதலாக வயலில் உழுதல், அக்காலத்திலே மிகவிசேஷமாக மதிக்கப்பட்டும், கலப்பை நுகம் சவுக்கு முதலியவைகளுக்கு சமயகுருவினால் விசேஷ ஆராதனைகள் செய்யப்பட்டும் வந்தன. அக்காலத்திலுள்ள அரசர் ஏர்மங்கல காலத்தில் வயலுக்குச் சென்று பொன்னாற்செய்யப்பட்டகலப்பையினால் தாமாக உழும் வழக்கமிருந்தது. இவ்வாறு ஏர்மங்கலஞ் செய்யப்பட்ட இடம் இன்றும் பொன்னேரி என்று வழங்கப்படுகிறது. வேளாண்மைப் பாக்கியத்தைப் பெற்றிருந்த அக்காலக் கமக்காரரை அறிவிற் சிறந்த கவி சிரேஷ்டர்கள் "வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" எனவும், அவர்களுடைய கையை "மேழி பிடிக்குங் கை" எனவும், "வேல்வேந்தர் நோக்குங் கை" எனவும், "ஆழி பிடித்தே அருளுங் கை' எனவும், வியந்துகூறினர். வள்ளுவநாயனாரும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின்செல்பவர்" எனக் கூறினர். இவ்வளவு சீரும் சிறப்புமாகவும், கண்ணும் கருத்துமாகவும், உயர்வும் உயிருமாகவும் இருந்த கமத்தொழிலானது இப்பொழுது என்னநிலையில் இருக்கிறதென்பதையும் சிறிது ஆராய்வாம்.

ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள மேனாட்டார் தங்கள் தேசம் மிகச் சிறியதாதலினாலும், அங்கு குளிரும் பனியும் இடையிடையே பெருங் கேட்டை விளைப்பதினாலும், சீவனஞ்செய்யும்மார்க்கமின்றி புறப்பட்டு இங்குவந்து பலதுறைகளிற் பொருளீட்டத் தொடங்கினர். அவர்களுடைய வெளித்தோற்றத்திலும் நவீனநாகரிகக் கட்பகட்டிலும் நம்மவர்கள் ஈடுபடலாயினர். அவர்களைப் பின்பற்றுவதே தங்கள்முறைமையும் கடமையுமெனத் தீர்மானித்து அவ்வாறு செய்வாராயினர். ஒருவரைப் பார்த்து இருவரும், இருவரைப் பார்த்து ஐவரும், ஐவரைப் பார்த்துப் பன்மருமாக அதிகரிக்கத் தலைப்பட்டனர். எங்கள்தேசத்தில் உத்தியோகப் பயித்தியம் காட்டுத்தீபோற் பரவத் தொடங்கியது. சிலர் உத்தியோகத்திற் பிரவேசித்தனர். பலர், தான் காதலித்த ஆடவனையே விவாகஞ் செய்வேன்; அது தவறுமாயின் வேறொருவரையும் மணஞ்செய்யாது நித்திய கன்னிகையாக இருந்து இறந்து மறுபிறப்பிலேனும் அவனையே மணப்பேனென்ற பெண் போல, உத்தியோகமேசெய்வேன்; அது தவறுமாயின் வேறொரு தொழிலிலும் பிரவேசியாது ஆயுள்பரியந்தம் இடர்ப்பட்டிறப்பேன் என்ற முறையில் நிற்கத் தொடங்கினர். இதுவே எங்கள் கமத்தொழில் குன்றுவதற்கு விசேடகாரணமாகவந்தது. கலப்பை பிடித்து உழுவதை மறந்தனர்; கமக்காரன் என்னும் பேரால் அழைக்கப்படுவதை வெறுத்தனர்; கமக்காரன் என அழைப்பதிலும் "ஐயா" என்றழைப்பதையே கௌரவம் எனக் கொண்டனர். அதிலும் "ஸேர்" என்று ஆங்கிலத்தில் அழைத்துவிட்டால் அதுவே பெரும் பாக்கியமெனக் கருதினர். ஸேர் என்று அழைப்பதற்கு அரைரூபா தக்ஷணை கொடுப்பதற்குத்தானும் பின்னிடமாட்டார்கள். கமக்காரரை சீர்திருத்தமில்லாதவரென மதிக்கத் தலைப்பட்டனர். ஒருவனுடைய காலடியில் ஒடுக்க வணக்கத்துடன் இரந்துநின்று, அவன் காலாலிடுவதை தலையாற் சுமந்து செல்வதை உத்தியோகமெனக் கொண்டு அவனாற் கொடுக்கப்படும் வேதனத்தைப் பெற்று மீளா அடிமையாக உயிர்வாழ்தலையே கௌரவமென மதித்தனர். இதன்காரணமாக எங்களுடைய செய்கைகளும், ஏனைய நடவடிக்கைகளும் நாளடைவில் அடிமைகளுடைய செய்கைபோலாயின. "பூமி திருத்தியுண்" என்ற வாக்கியம் பறந்தது எங்கள் முன்னோருடைய வீரதீரம் இறந்தது. மேனாட்டாருடைய பணவாசை என்னும் தொற்றுநோய் இங்கு வந்து தலைவிரித்தாடத் தொடங்கியது. காலபேதத்தினால் மழையும் தன் முறைமையில் மாறுபட்டது. தமையன் கமத்தொழிலிற் கூடிய வருவாயுடையவனேயாயினும், குறைந்த வேதனத்துடன் உத்தியோகத்தி லிருக்குந் தம்பிக்கு ஏவல்செய்யவேண்டிவரத் தொடங்கியது. தகப்பன் உத்தியோகத்தனாகிய மகனுக்கு சாரத்தியஞ் செய்ய வேண்டியும், சிலகாலங்களில் மகனுக்குப் பின்னே பெட்டிமுதலிய பயணச்சாமான்கள் கொண்டுபோகவும்வேண்டி வந்தன. இவைகளெல்லாம் எங்கள் சமத்தொழிலைக் கைவிட்டு, உத்தியோகம் பார்க்க வேண்டுமென நிகழ்ந்த விபரீத நினைவினால் எமக்குவந்துசேர்ந்தனவாகும். இதுநிற்க,

நமது சகோதரிகளைப்பற்றியும் சிறிது ஆராய்வாம்: கமத்தொழில் இவர்களுக்குச் ஜென்மப்பகையாயது. ஒரு கமக்காரன் திரண்ட செல்வவந்தனாயினும், கல்வி அறிவொழுக்கங்களினால் மேம்பட்டவனாயினும், சர்வாங்க சுந்தரனாயினும் அவனை அருவருத்துப் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். மூடவனாயும் அழகில்லாதவனாயும் வயிற்றுப்பாட்டுக்கு அன்றாடு திண்டாடுபவனாயினும் பேரளவில் உத்தியோகத்தன் என அழைக்கப்படுவானாயின் அவனையே விவாகஞ் செய்யவேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கத் தலைப்பட்டனர். நாம் ஆரம்பத்திற் கூறியுள்ள நமது சகோதரர்களும் இந்த நமதுசகோதரிகளும் சதிபதிகளாகி வாழும் வாழ்க்கையானது வெகு விநோதமாக நடைபெறவேண்டி வந்தது. உத்தியோகநேரமல்லாத காலங்களிலாயினும், விடுமுறைநாட்களிலாயினும் கமத்தொழிலைப்பற்றிச் சிந்திப்பதில்லை இதனாலே தேகாப்பியாசஞ்செய்தல் அறவே ஒழிந்தது, தேகாரோக்கியம் குன்றியது. நல்விரத்தமோ சுத்த சூனியம். பற்பல நோய்கள் தேகத்தை முற்றிக்கையிட்டன. கைதேர்ந்த வைத்தியர் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருநாளும் குடியாக இருக்கவேண்டி வந்தது. இவர்களுடைய குடும்ப வாழ்க்கையையும், இவர்களுடைய பிள்ளைகளின் நிர்ப்பந்த நிலையையும் இங்கு எழுதப்புகின் அது பெரும்பாரதமாகுமென அஞ்சி விடுத்தேம்.

எங்கள் கமத்தொழிலானது "அரிசிப் பொதியொடு திருவாரூர்" என்றதுபோல, எங்களுக்குவேண்டிய உணவுப்பொருளைக் கொடுப்பதோடு நோயற்ற வாழ்வையும் கொடுக்குமகத்துவத்தையுடையதாகும். உழுதுண்டுவாழ்வதற்கு ஒப்பில்லையென்ற மேல்வாக்கைப் பழுதுசொல்லி இகழும் நம்மவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொழுத்துமாறு சிலவருடங்களுக்குமுன் நிகழ்ந்த அரிசிப்பஞ்சமானது பின்னருஞ் சிலகாலத்துக்கு நீடித்து நிற்குமாயின் எங்கள் கமத்தொழில் பண்டுபோற் செழிப்புறுமெனக்கூறல் மிகையாகாது.

ஆதலின் நடந்துபோன காரியத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாகித் தீராக் கவலைக்காளாவதை விடுத்து, எங்கள் முன்னேற்றத்தின்பொருட்டும், வெள்ளம் வருமுன் அணைகட்டவேண்டுமென்ற முறைப்படி முன்போன்ற பஞ்சம் இன்னமும் எங்களைக் கொள்ளைகொள்ளாத பிரகாரமும் கமத்தொழிலை விருத்தி செய்தலே எங்கள் விசேட கடமையாகும்.

"ஆற்றங் கரையின் மரமு மரசறிய,
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்,
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்,
பழுதுண்டு வேறோர் பணிக்கு."

சமாசாரம்.

காலநிலை:—பனிபெய்ய ஆரம்பித்துவிட்டது. ஊரில் சலதோஷம் இருமல் சுரம் கூகைக்கட்டு முதலிய நோய்கள் இடையிடையே காணப்படுகின்றன. அரிவிவெட்டுதல் சூடுமிதித்தல் முதலிய கமமுயற்சிகள் நடைபெறுகின்றன.

பிரியாவிடைக் கூட்டம்:—யாழ்ப்பாணத்தைச்சார்ந்த கொழும்புத்துறையை வாசஸ்தானமாக உடையவரும் இப்பொழுது மாத்தளையிலே காஞ்சரப்பனை என்னும் தோட்டத்தில் 22 வருடகாலம் பெரிய கண்டக்டராகவிருப்பவருமாகிய ஸ்ரீ R சுப்பையா அவர்கள் உபகாரவேதனம் பெற்று இளைப்பாறும் தருணத்தில் அவர் பிரியாற்றாத நண்பர் பலர் இந்த பிப்ரவரி௴ 8௳ வெள்ளிக்கிழமை அவருக்கு ஓர்பிரியாவிடைக் கூட்டம் நடத்தினர். ஸ்ரீ R. சுப்பையா அவர்கள் இந்த மாதம் 22 திகதி யாழ்ப்பாணத்துக்குப் புறப்படுவார். —நடிக.

போத்தல் விளக்கினால் நேர்ந்த விபத்து — மட்டக்குளியிலே வசிக்கும் ஒரு சிங்களமாது போத்தல்விளக்கு கவிழ்ந்து நெருப்புப் பற்றியமையினால் கடுங்காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டாள்.

நமது இளவரசர்:—நமது இளவரசர் சென்றவாரம் குதிரையேற்றப்பயிற்சி செய்யும்போது குதிரையினின்றும் வீழ்ந்துதமதுகாலை என்பு முறியப் பெற்றுச் சிகிச்சை செய்யப்படுகின்றாரெனச் சமாசாரம் பிறக்கின்றது.

மனைவி தண்டிக்கப் பட்டமை.—நாவலப்பிட்டியில் ஒரு சிங்களப்பெண் தன்னுடைய பிள்ளைகளைச் சரியாக நடத்தாமையினால் அவளுடைய புருஷன் அவள்மீது கடுங்கோபமுற்று, கையைப்புடைத்து, கன்னத்திலும் கடித்துவிட்டான். பொலிசார் அவனைக் கைதுசெய்திருக்கிறார்கள்.

மோட்டோர்ரதம் கிணற்றில் இறங்கினமை:—மாத்துறையில் ஓர் மோட்டோரதம் தெருவில் ஓடும்பொழுது பக்கத்திலுள்ள கானில் இறங்கி அருகிலுள்ள கிணற்றிற் குதித்தது. ஒருவர் உடனே உயிர் துறக்க இன்னொருவர் படுகாயத்துடன் மாத்துறைவைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

பதிவு செய்யப்பட்ட பாசல் திருடப்பட்டமை —நாவலப்பிட்டியிலிருந்துகொழும்புக்கு அனுப்பப்பட்ட ஒரு தபாற்சாக்கு இடைவழியில் திறக்கப்பட்டு, பணமும் வேறு சிலசாமான்களும் கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட பாசல் திருடப்பட்டது. இதைப்பற்றி விசாரணை நடைபெறுகிறது.

இந்திய சமாசாரம்.

சிறை புகுந்தபோது மகாத்மா தேசத்துக்களித்த செய்தி.

'பம்பாய்' கிரானிகல் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான். எஸ். ஏ. பிரெல்வி மகாத்மாவைக் கண்டு பேசியதிலிருந்து, காந்தியடிகள் தண்டனையடைந்ததும் அப்பொழுது காங்கிரஸ்அக்கிராசனராயிருந்த ஹகீம் ஆஸ்மல் கான் மூலமாக தேசத்தாருக்கு ஒரு கடிதம் அனுப்ப விரும்பியதாகவும், ஆனால் அக்கடிதம் ஹகீம் அஸ்மல் போய்ச் சேரவில்லை யென்றும், அக்கடிதத்தில் சில பாகங்களை மாற்றவேண்டுமென்று பம்பாய் அரசாங்கத்தார் கேட்க, மகாத்மா அங்ஙனம் செய்யமறுத்து விட்டாரென்றும், அந்தக் கடிதத்தைக் கூடிய சீக்கிரத்தில் பிரசுரிக்க மகாத்மா உத்தேசித்திருக்கிறாரென்றும் தெரிகிறது.

"ஸ்ராண்டேர்ட்"
கொழுக்கியோடுகள்.
(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இசைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்று வருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்வெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தர்மவிலாசம்,
'Ruby" வல்வெட்டித்துறை.

(H. 25.)

மாண்டவன் மீண்டமாயம்

யமபடர்கையினின்று தப்பிய சிறுவன் கூறும் விபரம்.

வைத்தியர்களும் சாக்ஷி

கல்கத்தா ஷியாம் பஜார் பகுதி பிருந்தாவன பாலர் சந்து 7-வது நெம்பர் கிரஹத்தில்வசிக்கும் ஸ்ரீமாக் அசுடோஷ்ராய் சௌத்ரி உண்மையில் மாண்டுபோய் மீண்டும் உயிர்பெற்ற ஒரு வாலிபனது சரித்திரத்தைக் குறித்து ஒரு கடிதம் எழுதியுள்ளார். என்னுடைய 2-வது குமாரனது பெயர் பரிதோஷ குமாரராய் சௌத்ரி. அவனுக்கு 22-வயதாகிறது. அவன் பி. எஸ். ஸி பட்டப்பரீக்ஷைக்குப் படித்துவருகிறான். அவனுக்குக்கொடிய ஜுரம் கண்டிருந்தது. கல்கத்தாவிலுள்ள டாக்டர்நளினிரஞ்சன சென்குப்தா ஸர் நீலரதன் சர்க்கார் டாக்டர் பிரமச்சாரி ஆகிய மேதாவிகள் பலரது உதவி இருந்தபோதிலும் இந்தப்பையன் இனிப்பிழைக்கமாட்டானென்று ஜனவரி மாதம் 16-தேதியன்றிரவு கருதப்பட்டது. இச்சிறுவனது நிலைமை மிக்க கேவலமாக இருந்ததால் டாக்டர் நளினிரஞ்சன சென் குப்தா இரவில் எனது வீட்டிலேயே இருக்கத் தீர்மானித்தார். இரவில் 11-மணிக்கு டாக்டர் குப்தா வந்து சிறுவனது கையைப்பார்த்தபொழுது அவனது நாடி மிக்க மெதுவாக அடித்தது அது அடிக்கும் சப்தமே கேட்கவில்லை சிலநேரத்திற் கெல்லாம் டாக்டர் குப்தாவுடன் வியாதியாயிருந்த எனது 2வது குமாரன் தனக்கு மரணத்தறுவாய்வரப்போவதைக் குறித்து தனக்குள்ள பயத்தை எடுத்துரைத்தான். ஆனால் சில நிமிஷங்களுக்கெல்லாம் அவன் "நான் பிழைத்தேன" என்று திடீரென்று கூவினான். உடனே அவனது தேக நிலைமையும் மாறியது. நாடி அடிக்க ஆரம்பித்தது. தேகம் மென்மேலும் குணப்பட்டு வந்தது. அவன் தற்பொழுது பூரணமாக குணமடைந்து விட்டான். மறுதினம் காலையில் அவன் ஒரு விநோதமான கதையைக்கூறினான், அவன் கூறியதாவது:—என்னை இரண்டுபேர் தூக்கிக் கொண்டுபோயினர். நான அவர்களைக்காண முடியவில்லை. நான் இறந்து விட்டதாகவும் மறு உலகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் என்னுள் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. என்னை அவர்கள் சிறிது தூரம் தூக்கிச் சென்றதும் ஒருவர் திடீரென்று தோன்றினார் அவர் என்னைத் தூக்கிச் சென்றவர்களைச் சேர்ந்தவரல்லர்போலும். அவர் "இதென்ன? நீங்கள் இந்த மனிதனை எங்கு தூக்கிக் கொண்டு போகிறீர்கள்" என்று கேட்டார். இதைக்கேட்டதும் அந்த ஆட்கள் என்னைஉடனே போகவிட்டுவிட்டனர், எனது தேகமானது தரையில் திடீரென்று விழுந்தது. இந்த 3வது மனிதனைக் கண்டு என்னைத் தூக்கிச்சென்றவர்கள் மிகுந்த ஆச்சரியமும் பயமுமடைந்தனர். அவர்கள் தங்களால் இயன்ற அளவு வெகு வேகமாகவோடினார்கள். என்னை அவர்கள் கீழே விட்டதும் ஒருவன் இரண்டுமுறை பலமாகத் தும்மினான். இதன் பிறகு நான கண்விழித்தேன. நான் பிழைத்துப்போனதாக உணர்ந்தேன், "நான் பிழைத்தேன்" என்று இயற்கையாக உரக்கக் கூறினேன். இந்தக்கதையிலுள்ளமிகவும்விநோதமான அம்சமென்னவெனில் தும்மும் சப்தமும் கீழே தொப்பென்று விழும் சப்தமும் வீட்டிலிருந்தவர்கள் எல்லோராலும், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களாலும் நன்றாகக் கேட்கப்பட்டன. பக்கத்து வீட்டு ஜனங்கள் தொப் என்று ஏதோ விழுந்த சப்தத்தைக் கேட்டு என்ன நிகழ்ந்ததென்பதைக் கேட்கவந்தனர். டாக்டர் யார் தும்மினார்களென்பதையும் என்ன நிகழ்ந்ததென்பதையும் பார்த்தறிவதற்காக அறைக்குள் ஓடி வந்தார். 6 பேர் வியாதியஸ்தனைச் சுற்றி விழித்து உட்கார்ந்து கொண்டிருந்தபோதிலும் சப்தம் எப்படி உண்டாயிற்றென்பது எவருக்கும் தெரியாது. அவர்கள் எவரும் அதுபற்றி ஒன்றும் கூறமுடியவில்லை. மாண்டுபோனவர்கள் மீண்டும் பிழைத்துக்கொள்ளும் கதைகளை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இச்சிறுவனது கதையை ஊர்ஜிதப்படுத்த குறைந்தது 3 டாக்டர்களும் 12 ஜனங்களும் இருந்தனர் என்பதுதான் இதிலுள்ள விசேஷமாகும். வைத்தியர்கள் எல்லோரும் இச்சந்தர்ப்பத்தில் அவனுடைய தேகஸ்திதி வெகு துரிதமாக மாறியதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். நம்முடையவேதாந்தத்தில் கூறப்படுவதை விட அதிகமான விஷயங்கள் பூலோகத்திலும் மேலுலகத்திலும் இருக்கின்றன. "சுதேசமித்திரன்"

சுபோதந் துணுக்கைகள்.

(வண்ணைநகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது)

சமயதீக்ஷைபெறாதவனுஞ்சைவனா?

நமது சைவத்திருவாளருட்சிலர் சமயதீக்ஷை பெறாமலே தம் வாழ்நாளை வீணாக்கி விடுகின்றார்கள். சமயதீக்ஷைபெறாதவன் அஞ்ஞானியாக எண்ணப்படுவான். அவன் சைவக்கிரியைகள் ஒன்றற்கும் அருகனல்லன். ஞானஸ்நானம் பெறாதவன் கிறிஸ்தவனாவானா? சுமான் கொண்டு கலிமாச்சொல்லாதவன் இஸ்லாம் மதத்தவனாவானா? அங்ஙனமே சிவதீக்ஷைபெறாதவன் விபூதியை உத்தூளனமாகத் தரித்தா

னும் எக்காலத்துஞ் சைவசமயத்தவனுகமாட்டான். எத்தனையோ அறிவாளிகள் தங்கள் யாக்கை (புற்புதம்) நீர்க்குமிழிபோல்நிலையற்றதெனவுணர்ந்து இரண்டாந் தீக்ஷைபெற்றுச் சிவபூசையும் எழுந்தருளப்பண்ணிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் அங்ஙனம் சிவபூசை செய்துவரவும், நாம் சமயதீக்ஷைதானும் பெறாது 'கண்டதேகாட்சி கொண்டதே கோலமென'' லோகாயுதமதத்தைத் தழுவி, ஐயகோ! பிறவிச்சாகரத்தில் இன்னும் கரைபேறுவதெக்காலம்? தற்காலம் கல்வியறிவற்ற பாமரசனங்களேயன்றி தமிழ் இங்கிலிசு என்னும் இரண்டு பாஷைகளையுங்கற்று உயர்ந்தஉத்தியோகத்தில் அமர்ந்திருப்பவர்களாயும் பலராலும் மதிக்கத்தக்கவர்களாயுமுள்ள பிரபுக்களும் சிவதீக்ஷை பெறாது நாங்களுஞ்சைவசமயிகளென்று வெட்கத்தைக் கக்கத்திலிடுக்கிக்கொண்டு வெளிவருவது விசனிக்கற்பாலதே! இத்தகையாரோடுசம்பாஷிக்குங் காலங்களில் "சைவசமயிகள் சிவதீக்ஷைபெறவிட்டால் அஞ்ஞானிகளோடொப்பர்" என நமது சமயசாத்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் அதற்குஅவர்கள் என்னசெய்யலாம்! நான் கவண்மேந்து வேலைகாரணபடியால் தினந்தோறும் அனுட்டானம் முதலிய நித்திய கருமங்கள் செய்துவிட்டுச்செல முடியாது; சிறிது காலாதீதமானுல் வாய்க்கஞ்சிக்கு ஆனியெய்திவிடும்; அஃதன்றி மாமிச பட்சணிகள் சிவதீக்ஷைபெறுவதினுல் சிறிதும்பயனில்லை. முதல் அதை நீக்கிய பின்னரே சிவதீக்ஷைபெறல் வேண்டும். அதையகற்றுமல் சிவதீக்ஷை பெறுவோமாயின் "குளிக்கப்போய்ச் சேறுபூசியதன்மையை" ஒக்கும்; ஆதலால் உத்தியோககாலம் முடிந்து (பென்ஷன்) உபகாரச்சம்பளம் பெறுங்காலத்தில் மற்சமாமிசத் தையும் அறவேயகற்றி சட்டிபானைகளெல்லாம் எடுத்து உடைத்துவிட்டுச் சிவதீக்ஷையையும் பெற்றுச் சைவசமய நெறிதவறுது ஒழுகுவோமென்கிறார்கள். அந்தோ! இவர்கள் மதியிருந்தவாறு என்னே? அண்ணன் வருமட்டும் அமாவாசை நிற்குமா? தென்புலத்திலிருந்து கூற்றுவன், நீவிர்கவண்மேந்திடம் உபகாரச்சம்பளம்பெற்று மற்சமாமிசத்தையும் விடுத்துச் சிவதீக்ஷைபெற்ற பின்னரே வருகிறேனென்று திருப்பம் விடுத்திருக்கிறானு? இதுவரைஎங்கட்குச்சென்றவயசை இத்தனையென்று விரல்மடித்துக்கணக்கெடுக்கலாம். இன்னும் செல்லவேண்டியிருக்கும் வயசை இத்தனையென்று ஒரு விரலைத்தானும் மடித்துக்கணக்கெடுக்க முடியுமா? "நெருநலுளனொருவனின்றில்லை" என்றும், "நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறுனுள்" என்றும் "காலை நம்முடையமுறை நாளாவதுமறியீர் நமனுடைமுறைநாளாவது மறியீர்" என்றும் ஆன்றோர் கூறியுள்ள அமுதவாக்குகளை இவர்கள் அறியார்போலும்? தவிர, 'சருகரிக்க நேரமேயன்றிக் குளிர்காயநேரமில்லை" என்றவண்ணமாய் சிவத்தியானஞ் செய்யநேரமில்லையென்று ஒரு போலி நியாயங் கூறுகிறார்கள். நேரமில்லாமல் எங்கேபோய்விட்டது; திருடன் கொண்டு போய்விட்டானு? விளக்குமுத்துலைபோட்டிரைப்பவனேமான" ஒரு சிறிதும் உபயோகமற்ற அம் தேகத் தினவை யொத்தது மாகிய குடும்பத் தொல்லைகளிலீடுபட்டுக் நேரத்தைச் சூரியனுக்குக் கொள்ளை கொடுக்கின்றார்களே! காலைபத்துமணிக்குக் கந்தோருக்குப் போகமுன் ஐம்பதுமுறை அனுட்டானம் முடிக்கலாமே! இவர்கள் சொல்லும் சாக்குப்போக்கைநோக்கும்போது "ஆடத்தெரியாததாசிசனக்கூட்டம்போதாது" என்றதை ஒத்திருக்கின்றது; சிவத்தியானம் செய்தற்கும் நேரம் வேண்டுமா? "நின்றுமிருந்துங் கிடந்துநடந்து நினைமின்றுஞ் சிவனுரினை.' என்னும் ஆன்றோர்வாக்கைப் பின்பற்றி யொழுகலாமே? விடபுருஷனுக்குத் தனது காமக்கிழத்தியில் எந்நேரமுஞ் சிந்தையிருப்பதுபோலவும் நன்மாணுக்கனுக்குத் தான்கற்றகல்வியிலே சதாசிந்தனையிருப்பதுபோலவும் சூதாடுபவனுக்குஎந்நாளும் அவ்வாட்டத்திலே மனஞ் செல்வது போலவும், பல விநோதகதைகளைப் பேசிக் கைவீசிச் செல்லும் பணிப்பெண்ணினது உள்ளம்தலையிலுள்ள தண்ணீர்க்குடத்திலிருப்பதுபோலவும், மகான்கள் எப்பணி புரியினும் ஒன்றினுந்தாக்குருது தங்கருத்தை இறைவன் திருவடிகளிலே பதித்து ஏகாந்தமாய் வைகுவர் அங்ஙனமே நாமும் எக்கருமத்தை இயற்றும் போதும் நாளடைவில் மனச்சேட்டையையகற்றி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தோடு கூடிய சிவோபாசனைசெய்யலாமே? பிணம் முதலிய அசுத்தமாணவஸ்துக்களின் சாரத்தையுண்டு சீவிக்கின்ற எளிய பிசாசுகளும் மோக்ஷத்தை விரும்பித் தெய்வவழிபாடு செய்துவருகின்றனவாயின் முற்செனமங்களில் பல யோனிகள் தோறும் பிறந்திறந்து "கடலைக்கையால் நீந்திக்கரையேறியதுபோல" பெறுதற்கரிய இந்த மானிட சரீரத்தை எடுத்தும் பிறந்த நாங்கள் சிவோபாசனை செய்யாமல் அவமேகாலத்தைக் கழிப்போமாயின எம்மினும் (கபோதிகள்) விழிகண் குருடர் யாரிருக்கின்றார்கள். பேய்கள் தேவவழிபாடு செய்த சரித்திரத்தைச் சங்கிரகமாகக் கூறுகிறேன்; அதுவருமாறு:—

"சோழதேசத்திலே கடற்கரை வடக்குப்பக்கத்திலுள்ள ஒருகாளிகோயிலில் பெருந்தொகையான பேய்கள் சேர்ந்து ஒரு இரவில் அக்காளி அம்மனைப் பூசிப்பதற்கு வேண்டிய சந்தனம் புஷ்பம் தூபதீபங்களெல்லாம் சேகரித்துப் பூசைக்கு ஆயத்தம் செய்யும்போது அத்தேசத்தை யாளுங் குலோத்துங்க சோழனை மாறுவேடம்பூண்டு நகரிசோதனை செய்துவருகையிற் கடற்கரையிலுள்ளகாளிகோவிலில் தீபமெரிவதைக்கண்டு அவ்வர்த்தயாமத்தில்அங்கே என்ன நடக்கு மென்பதை அறிய விரும்பியாதுஞ் சத்தமின்றி மெதுவாகப் போய் ஒரு பக்கத்திலே மறைந்து நின்றுபார்த்தான். அந்தச் சமயத்தில் ஒரு பெரிய பேய் அம்மனுக்குச் சந்தனுபிஷேகஞ் செய்யச் சந்தனம் அரைத்துக் கொண்டிருக்கும்போது, ஒருகுட்டிப் பேய் வந்து பூசுவதற்காக அரைத்து வழித்த சந்தனத்தில் கொஞ்சத்தை அள்ள அப் பெரிய பேய் அம்மனுக்குச் சாத்துமுன் அள்ளிஅசுசிப்படுத்தி விட்டதேயென்று சிற்றமெய்தி ஒரு வளைந்த கத்தியினுல் அக்குட்டிப் பேயின் கையை வெட்டிவிட்டது. அந்தச்சம்பவத்தைக் கண்ட அரசன மட்டற்ற வியப்படைந்து கம்பரிடத்தில் போய் இச்செய்தி அறிவியாது கண்டதுத்தியாய் பாடும்படி சொல்லி அவர் வாயால் கேட்போமெனறு வந்து கம்பர் வீட்டு வெளிக்கதவில் தட்டினுன். வீட்டின் முற்கட்டில் சயனித்திருந்த கம்பருடையமனைவியாகிய அமிசாவதி எழுந்து கதவைத்திறந்து அரசனையுங் கூட்டிச்சென்று கம்பர் படுத்திருக்கும அறைக்கதவின பக்கத்திலே நின்று,

"கரைக்கு வடக்கிருக்குங் காளிகாளமைக் கரைத்துவழி சாந்தைத்தொட்டபேயென்று இரண்டடியையும பாடிக்கதவிலே தட்டினர்; அதைக்கேட்ட கம்பர் கதவைத்திறந்து வெளியேவரும்போது,—உரைத்தும் மறைக்க வறியாதவன பேயின கையைக், குறைக்குமாங் கூனகத்தி கொண்டு," என்று பின இரண்டடியையும் பாடி அரசன் கண்டு யந்த அதிசய சம்பவத்தை விளக்கிக்காட்டினர். இரண்டு பேருடைய தெய்வீக வாக்குகளைக் கேட்ட அரசன் அப்பனும் பிள்ளையும் வாணியின அம்சமாக அவதரித்திருக்கிறார்களென்று மிக்க இறும்பூதெய்திகம்பரிடத்தில்விடைபெற்றுக்கொண்டு அரண்மனைக்குச்சென்று, மறுநாள் கம்பரையழைத்து நூறுவேலி நன்செய் சனமானஞ் செய்தான.

சகோதர சகோதரிகளே! சிவ இரக்கமற்ற எளிய பிசாசுகளே மிகுந்த பக்தியோடு தேவவழிபாடு செய்ததைக்கண்டீர்களா? ஆதலால் இதுகாறும் சிவ தீக்ஷைபெறது பாராமுகமாயிருந்த ஒவ்வொருவரும் பிணுல் பார்ப்பேமென்று தவணைபோடாது தத்தம் குருமாரிடத்தில் பெற்று,மற்சமாமிசஉணவுகளைஅடியோடு நீக்கி, அனவரதமும் அம்பிகைகேள்வன அடியினை இறைஞ்சி உம்பர்க்கு மெட்டா உயர்கதியெய்தக் கடவீர்கள்.

சதிபுருஷ சம்பாஷணை.

மத்தியமாபதி என்னும்நகரத்தில் ஜெகானந்தர் என்னும்ஒருவர் உலகவாழ்க்கையில் வெறுப்புற்றவராய் இல்லறவாழ்க்கையில் வாழ்ந்து வரும்நாளில் ஒருதினம் பகற்போசனம் முடித்துக்கொண்டு தலைவாயிலின் பக்கத்திலிருக்கும் பொழுது அவருடைய மனைவி அவர் பக்கலை அடைந்து பிராணநாதா! தாங்கள் எந்தநேரம் பார்த்தாலும் பூரண திருப்தியுடன் ஆனந்தமாகவே இருக்கிறீர்கள். என்னுல் ஒருநிமிஷமேனும் அவ்வாறிருக்க முடியவில்லையே. ஒருவாறு தங்களுக்குப் பெருந் துக்கத்துக் கேதுவான கருமங்கள் நேர்ந்தாலும் அக்காலத்திலும் மனவருத்தமடையாது ஆனந்தமாகவே இருக்கிறீர்கள்.

புருஷன். பெண்ணே! நாம் மனவருத்தப்படுவதினுல் ஏற்படும் பிரயோசனம்யாதுமில்லை "அமைத்தவினைக்கிடா வனுதினமுஞ்செய்கவிமைப்பொழுதும் வீண்செயலொன்றில்லை" என்றவாக்கியப்படி எல்லாம் எங்கள் பூர்வபுண்ணியவசமாகவேநடைபெறும்.

சதி: பிராணநாதா தங்களிடத்திலேயாவது இப்படியானவிஷயங்களைக் கேட்டுஅறிந்துகொள்ளலாமென்றால் எனக்கு ஒரு நிமிஷந்தானும் சாவகாசம் கிடைக்கிறதில்லை. அதிகாலையில் நித்திரைவிட்டெழுதல் வேண்டும். வீட்டுவாசலைச் சுத்தப் படுத்துதல்வேண்டும். சாணி தெளித்தல்வேண்டும். பாத்திரங்களைச் சுத்திசெய்தல்வேண்டும். ஸ்நானஞ் செய்து சமையலுக்கு ஆரம்பஞ் செய்தல் வேண்டும். வித்தியாசாலைக்குப் போகும் பிள்ளைகளுக்குப் போசனம் கொடுத்துவிடுதல் வேண்டும். சிறு குழந்தைகளுக்கு உணவு ஊட்டுதல்வேண்டும். இதுவரையில் மணியும் பத்துப்பத்தரையாய்விடும். பகற்போசனத்துக்கு வேண்டியவைகளைத் தயார்செய்தல்வேண்டும். தண்ணீர்மொண்டு கறிப்பதார்த்தங்கள் தயார்செய்து விறகு சேகரித்து சமையல்செய்து போசனம் முடிக்க எப்படியும் மணி மூன்று மூன்றரையாகிவிடும். அதன்பின் மா அரைக்கவேண்டும், பால்கறக்கவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவருடையகருமங்களையுந் நானே நேரில்நின்றுபார்வையிடுதல் வேண்டும். இதற்கிடையில் சூரிய அஸ்தமனகாலமாய்விடும், தீபம் ஏற்றுதல்வேண்டும், உடனே மறுபடியும் சமையல் வேலையில் கையிடுதல் வேண்டும். பின்னர் பிள்ளைகளுக்கும் தங்களுக்கும் போசனம் கொடுத்து நானும் போசனம் முடித்துக்கொண்டு கதவுகளைத் தாளிட்டு நித்திரைக்குப் போக 11மணியாய்விடுகிறது. அப்பால் படுக்கைக்குச் சென்று. அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து ஒவ்வொருநாளும் இவ்விதமாகச் சிரமப்படவேண்டியே இருக்கிறது. இப்படியானுல் ஆனந்தமாக இருக்கிறதற்கு எனக்கு நேரம்எங்கேயிருக்கிறது?

புரு; பெண்ணே, இதுவே உன்னுடைய கடமை உன் கடமையைச் சரிவரச் செய்ய நீ தவறுவாயானுல் கடவுள் சந்நிதானத்திலே குற்றவாளியாகக் காணப்படுவாய்.

சதி: நாதா நல்லநாள் திருநாள் என்றுதானும் நமது பெற்றுருடைய கிருகத்துக்குப் போவதற்கு சந்தர்ப்பமேற்படுவதாகக்காணேனே.

புரு: தான்தான் செய்யவேண்டிய கடமையிலும்பார்க்கமேலானதுவேறென்றுமில்லையே

சதி: தாங்கள் எந்தநேரம் வெளியே போகவேண்டுமென்று நினைக்கிறீர்களோ அந்த நேரம் வெளியேபோய் விடுகிறீர்கள், பின் எப்போதிரும்பி வருவீர்களென்பது தானும் தெரியாது.

புரு: நான் எங்கே சென்றுலும் எந்தநேரம் சென்றுலும் உனக்குக்காரியமில்லை. உனக்கும் உன்பிள்ளைகளுக்கும்வேண்டியவைகளை என்னுடைய அந்தஸ்துக்கு ஏற்றவாறு செய்து முடிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருப்பேன்.

சதி: சரிதான் நாதா! காலை ஐந்துமணி தொடக்கம் இரவு பத்துமணி வரையும் செக்குமாடுபோலச் சுழலவேண்டியிருக்கிறது. இடையிலே ஒரு நிமிஷந்தானும் வெளியே போக முடியவில்லையே.

புரு: நல்ல விஷயம் சொன்னுய் நீ பகற்காலத்திலாவது இராக்காலத்திலாவது வீட்டைவிட்டு வெளியே போகமுடியாது. பெண்களை "வாசற்படிகடந்து வாராத பிச்சை" என மகான்கள் கூறியிருக்கின்றார்கள். ஒரு நிமிஷந்தானும் நீ வெளியே சென்றுல் வீட்டில் சச்சரவுகள் உண்டாகும். ஒருகுழந்தை ஒரு பிள்ளையைத் தள்ளும் ஒரு பிள்ளை மற்றக் குழந்தையைக் கிள்ளும் அதனுல் வீட்டிலே குழப்பமுண்டாகும். இதற்கிடையில் நம்மைத் தேடியும் யாரும் வருவார்கள் அவர்கள் வந்த விஷயத்தையும் ஆராய்ந்து அவர்கள் நமக்குக் கொடுக்கும் பொருட்டுத் தரும் பொருட்களைக் கவனமாக வாங்கி வைத்துத் தரல்வேண்டும்.

சதி: நீங்களும் இக்சேஎன்முன்னிலையில் என்னைப்போல இருந்தாலென்ன?

புரு: அப்படியானுல் நானும் உன்னைப்போலப் பெண்ணுக விருத்தல் வேண்டும். அதுவன்றியும் அப்படியிருந்தால் சீவனத்துக்கு வகையென்ன,

சதி: அதுவும் ஒரு கஷ்டம் இருக்கிறதுதான் ஆனுல் நீங்கள் வெளியே போகும்பொழுது எங்கே போகிறீர்களென்று சொல்லாமற் போய்விடுகிறீர்கள், சிலவேளைகளில் வீட்டுக்கு வாராமலும் விட்டுவிடுகிறீர்கள்.

புரு: பெண்ணே நீ சொல்வது உண்மைதான், நான் அப்படிச் செய்வதினுல் உனக்காவது உன் குழந்தைகளுக்காவது ஒரு குறைவும் ஏற்படமாட்டாது. நான் எங்கு சென்றுலும் எத்தனைநாள் வராதிருந்தாலும் உனக்கும் உன் குழந்தைகளுக்கும் வேண்டியபொருட்களை வேண்டியகாலத்தில் கொடாது விட்டதுமில்லை இனிமேல் விடுவதுமில்லை. இவ்வளவுதான் உனக்கு வேண்டியது. இத்துடன் திருப்திப்படாது அவசியமில்லாதவிஷயங்களிற் பிரவேசிப்பையாயின் வண்ணுன் வீட்டுக்கழுதை காவல் உத்தியோகம் பார்த்ததுபோலவே முடியும்.

சதி: பிராணநாதா குழந்தைகள் வளர வளர நம்முடன் எதிர்வார்த்தை பேசவுந் தலைப்படுகிறார்கள். இதற்கு நான் என்ன செய்கிறது.

புரு: பெண்ணே குழந்தைகளைச் சரிப்படுத்தி நடத்துதல் உன்னுடைய திறமையிலே தங்கியிருக்கிறது. நீ அவர்களைப் பட்சமாக நடத்தினுல் அவர்கள் உன்னைக் கௌரவப்படுத்துவதோடு நீ காலாலிடுவதையும் தலையாற் செய்வார்கள்.

சதி: நாதா அவர்களிடத்திலே நல்ல பழக்கம் இருப்பதாக எனக்குத்தெரியவில்லையே.

புரு: பெண்ணே அவர்களிடத்தில் நல்ல பழக்கம் இல்லையேல் அது உன்னுடைய குற்றம் அவர்கள் என்னைக் கண்டவுடன் எனது பக்கத்தை அடைந்துசிரித்தமுகத்துடன் குதலைவார்த்தைகளைப் பேசுகிறார்கள் நான் சொல்லும் புத்தியை அதிககவனத்துடன் கேட்டு நடக்கிறார்கள், உன்னைக் கண்ட நேரங்களில் வேறுபட்ட முக முடையவர்களாயும் மாறுபட்ட தொழிலுடையவர்களாயும் திரும்பிவிடுகிறார்கள். அவர்களைச் சீராகவும் ஒழுங்காகவும் நடத்துவதற்குத் தெரியாமையே காரணமாகும்.

சதி: சரிதான் அது போகட்டும் குடும்ப விஷயங்களிலாவது மற்ற விஷயங்களிலாவது தாங்கள் ஒருபோதும் என்னுடன் யோசனை செய்யாது விடுவதேன்?

புரு: பெண்ணே உன்னேடு யோசிக்கவேண்டிய விஷயமேதும் இருந்தால் ஒருபோதும் அப்படிச் செய்யாதிருக்க மாட்டேன்.

சதி: யோசனை செய்வதற்குத் தகுந்ததிறமை என்னிடமில்லையென்று சொல்லுகிறீர்கள்?

புரு: அவ்வித திறமை யிருந்தால் ஒருபோதும் இவ்விதமான கேள்விகளைக்கேட்டிருக்கமாட்டாய்,

சதி: சரிதான் நாதா என்னுடைய திறமை எப்படியாக இருத்தல்வேண்டும்.

புரு: பெண்ணே! "அன்னைதயையு மடியாள் பணியு மலரிப், பொன்னினழகும் புவிபொறையும்-வன்னமுலை, வேசிதுயிலும்விறன்மந்திரியமதியும், பேசிலிவையுடையாள்பெண்".

சதி: நாதா வித்தியாசாலையிலிருந்து பிள்ளைகள் வந்துவிட்டார்கள். எனது கடமை செய்வதற்கு நேரமாய் விட்டது விடைகொடுங்கள்.

புரு: பெண்ணே நல்லது போய்வா எனக்கும் வெளியிற்போக வேண்டிய கருமம் இருக்கிறது.

சண்முககுமாரசுவாமி.

தமிழ் வசன நடை.

யாழ்ப்பாணம்

பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள்:

தமிழ்மொழிக்கு நன்னூளுகியதுபோலும். எம்மொழிக்குற்ற துயர் எம்மொழிக்கும் சேர்ந்திலது. வழங்கா மொழியாகிய ஆரியம் முதலியனவும் நிறைவுற்றுள்ளன. நம்மன்னையார்க்குற்ற நோய்க் கொடுமையை யோர்ந்திரங்கி அதனைத் தீர்க்க முயலுவார் இந்நாளிற் பலர். தமிழ்ச்சங்கங்களுந்தமிழ் நன்மை நாடும் நூல்களும் பல தோன்றிப் பெருமுயற்சி செய்துவருகின்றன. ஆதலின் தமிழ்க்குற்ற நோய்களையும், தீர்க்கு முறைகளையும் இந்நாளில் உரைப்பது சாலப் பயனுறு மாதலின் இஃதெழுந்ததாமென்பது.

சொல்லினுஞ் சொற்றொடரினும், உரையினும் பொருளினும் எம்மொழி மிகவும் குன்றியது. சொற்குறை இருவகைத்து அவற்றுள் ஒருவகையில் ஆட்சியற்றவை. சங்கநூற் சொற்களில் பாதிப்பங்கு இந்நாளூல்களிற் காண்கிலம். முப்பானூண்டின் முன் வழங்கிய பல சொற்கள் மாய்ந்தன. ஒன்னுமை, உருத்துதல், உடன்பிறந்தான். உசாவுதல், சிவனுதல், எங்குற்றுன், கழுவாய், பட்டாங்கு, இச்சொற்களை இந்நாளில் எந்நூலில் யார் வாயிற் காண்பது?

இவ்வருந் தமிழ்மொழிகளை யெல்லாம் விழுங்கியது வடமொழியே. மணத்தை விவாகமும், சுவடியைப் புத்தகமும், தந்தைதாயைப் பிதாமாதாவும், சிறப்பை விசேஷமும், பொதுவைச் சாதாரணமும், மக்களை மனுஷரும், ஒழித்தன பிறவுமன்ன. இங்ஙனந் தனிச்சொற்கு வடமொழியாலுற்ற புன்கணுற்றொன்றுதது. மற்றேரினம் ஒருவகைப் பருமொழிகள். அன்னுளிற் காலங்காட்டு மீறுகள் ஆட்சியிற் பொலிந்தன. வருதும், சென்றும் செறீஇ முதலியன இந்நாளிறந்தொழிந்தன.

தொடர்மொழிக் குற்ற இடரிதனினுங்கொடிது. இந்நாளிற் றொடர்மொழிக்கெல்லாம் வடமொழிக்கேசெல்வோம். தமிழ்மொழியைத் தொடுக்க ஆற்றவு மஞ்சுகின்றேம். கல்விக்காப்பு என்பதற்கு வித்தியா பரிபாலனம் என்றும், மேன்மக்க என்பன் என்பதற்கு ஆரியசனப்பிரியன் என்றுங் கூறுகிறேம். முன்னுளிற் றொடர்மொழிகளை வேண்டியவாறு கண்டனர். பாடாண், கொண்டு கூட்டுப் பொருள்கோள், ஒப்படை, இடைப்பிறவரல், புக்கில் முதலிய தொடர்மொழிகளை இந்நாளிலாக்கக் கருதோம்.

சொற்றொடரும் பல்லாற்றானும் வலி குன்றியது. அதன் வனப்பாவது அதன் சுருக்கமே. "நுண்மாண் நுழைபுல மில்லான்" என்பதனை இந்நாளில் நுண்ணியதாய் மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் நுழைந்த அறிவைப் பெருதவன் என்றும், "மலமெற்று" என்பதனை மலமானது என்ன தன்மை யுடையது என்றும், "மகனெனல்" என்பதனை மகனென்று சொல்லாதிருப்பீராக என்றும், "எப்பொருட்டு" என்பதனை என்ன பொருளை யுடையது என்றும், "எய்த்த மெய்யன்" எனபதனை இளைத்த உடம்பை யுடையவனு யிருக்கிறுனென்றும் நீட்டியென்றும் நீள உரைக்கிறேம். அன்றியும் தமிழ் முறைக்கு:மாறுக ஆங்கில முறையைத் தழுவுகிறேம். சொற்றொடரி னிருமருங்கும் ஒத்த அளவினவாய்த் தலைபோலிருக்கும் பண்பினைக் கருத்திலுங் கொள்கிலம். இன்ன மாண்புகளிற் றலைமேயன்றி பல்வகை முறைக் கேடுகளுமுற்றன. அன்றியும் புதினங்களெழுதுவோரும் புதுக்கதைகளியற்றுவோரும் மொழிவழு, இலக்கணவழு முதலிய வழுக்கள் பொலிய வெழுதி நம்மொழியைக் கீழ்மொழியாக்குவர்.

பொருளாட்சியோவெனின் மிகவுங் கருங்கிற்று. தமிழில் ஒருபொருளுக்குப் பல சொல்லுளவேனும் அவைகளப்பொருளின் வேறுபாடுகளையேனும் வேறுதன்மைகளையேனுமுணர்த்தியிருத்தல்வேண்டும். (நிகண்டு) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், இம்மொழிகளெல்லாம் பெண் மக்களையே குறிக்கினும் ஒவ்வொன்றும் முறையே ஏழு, பதினொன்று, பதின்மூன்று, பத்தொ

ன்பது, இருபத்தைந்து, முப்பத்தொன்று, நாற்பது முதலிய வயசுப் பருவப் பெண்களையே குறிக்கும். மக்கள் மாக்கள் என்னுமிரண்டும் மனிதரைக் குறிக்கினும் மாக்கள் மூடரையே குறிக்கும். "மாவு மக்களுமை யறிவினவே, பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே" (தொல், பொரு) இன்னும் பலவேறுபாடுகளைக் காண்கிலம். இக்குறைவினு லாயிரக்கணக்கான சொற்கள் வீணாய்க்கிடக்கின்றன. அநேக கருத்துக்களைக் குறிக்கச் சொற்களு மில்லை.

தமிழில் வானசாஸ்திரம், சங்கமசாத்திரம், ரசாயனசாத்திரம், முதலியசாத்திரங்களில்லை. வடமொழியிலிருந்தேனும், பிறமொழிகளிலிருந்தேனும் தமிழிலியற்றப்படல்வேண்டும். அவைகளிலியன்றளவு பழைய தமிழ்ச்சொற்களமைத்துத் தமிழைப் பொலியச் செய்தல் வேண்டும். பத்திராதிபரும் பாலபாடம் முதலிய நூல்களியற்றுவோரும் தத்தம் புதினங்களிலும், நூல்களிலும் பழைய சொற்கள் வழங்கிவரச் செய்தல்வேண்டும். ஆட்சியில்லாத சொற்களின் அகராதி யியற்றல் வேண்டும். ஒரு பொருட்சொற்களின் வேறுபாட்டைக்காட்டும் அகராதி வேண்டும். விவேகிகளாலே வசனநடையுயர்த்தப்படல்வேண்டும். இவ்வனைத்துஞ்செய்யப் பெரியோர் முன்னிற்பாராயின் தமிழானது சங்ககாலத்துப்போலப் பொலிவும் பெருமையு மெய்தப்பெறுமென்பது கூறுதே யமையும்

கடிதம்.

சுகாதாரம்.

சுவாதம் (நியூமோனியா)

(Pneumonia)

சுவாதமென்பது, மனிதன் சீவித்தற்கு இன்றியமையாத அவயவமாகிய சுவாசப்பைகளில் உண்டாகுமோர் பெருமாபத்தானநோய்.

இந்தநோயில் பிரதானமாய் இரண்டு வகைகளுண்டு. கடற்பஞ்சிலிருக்கும் கண்ணறைகளைப்போற் கண்ணுக்குப் புலப்படாச காற்றறைகளைத் தாக்குமாயின் லோபர் நியூமோனியா என்றும் இக்காற்றறைகளுக்குக் காற்றைக் கொண்டுபோகும் குழாய்களைத் தாக்குமாயின் புரொங்கோ நியூமோனியா என்றும் சொல்வார்கள். இவற்றுள் முந்தினதுதான் சகசமாய்க் காணப்படுவது. பிந்தினதுதான் பொதுவாய்க் குழந்தைகளைத் தாக்குவது.

பொதுவாய் இந்நோய் தேகத்திலே குளிர் பிடிப்பதினால் உண்டாவது. மாரிக்காலத்திலே சகசமாய்ச் சனங்களுக்குள் பரக்கக்காணலாம். இந்நோயின் பீடிப்பு பொதுவாய்த் தேகவாசியிலேயும் தங்கியிருக்கிறது. நோயாளிகளாய் இருப்பவர்களையும், நோய்வந்து பூரண தேகபலத்தை அடையாதவர்களையும், பெலகுனர்களையும், மதுபானம் செய்பவர்களையும் பீடிப்பது மிகச்சுலபம். ஆகையால் இவர்கள் மற்றவர்களிலும் பார்க்க அதிக எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும். மாரிக்காலத்திலே அனுவசியமாய்க்குளிர் வழியே செல்லக்கூடாது. உடம்பைச் சூட்டைக்கொடுக்கக் கூடிய போர்வைகளாற் போர்த்தல்வேண்டும்.

இந்நோயின் பிரதான குணங்கள் தொடக்கத்திலே 101 அல்லது 104 டிக்கிரிவரையில் சுரம், கெதியான நாடியோட்டம், கெதியானதும் கஷ்டமானதுமான பெருமூச்சு, மார்பில் வலி இருமல் ஆயாசமென்பவைகளே. சுரம் காலையிலும் பார்க்கச் சாயந்தரத்திலே இரண்டொரு டிக்கிரி கூடவாயிருக்கும், இப்படியே சுரம் 7 அல்லது 8 நாளைக்கு ஒரே மாதிரியாயிருக்கும். நோயும் கூடக் கூட மேலே சொல்லப்பட்டகுணங்களுமதிகரிக்கும். இருமல் கபமுள்ளதாயும்; கபம் கடித்ததாயும் நிறத்திலே இரும்புக் கறளுக்குச்சமானமாயுமிருக்கும். மூச்சு இட்டுமுட்டாயும், கடினமாயும், முன்னிலும்பார்க்கக் கெதியாயுமிருக்கும். நோய்கண்டபக்கமார்பிலே காதை வைத்துக் கேட்டால் கரகரப்புச்சத்தம் கேட்கும். இரவில் உறக்கம் கிடையாது நோய்கடுமையாய்த் தாக்குமானால் சன்னியாகுவது சகசம். சன்னியாகினால், பிசத்துதல், படுக்கையைவிட்டு எழுந்துபோதல், படுக்கையிலிருக்கும் துணிகளை எடுத்தல் சகசமான குணங்கள்.

இந்நோயையுந் தொடக்கத்திலே மாற்றுவது வைத்தியர்களுக்கு மிக்க இலகுவாயிருக்கும் நோய் பெருத்ததின் பின் மாற்றுவது அதிக கஷ்டமாயிருக்கும். சிலசமையங்களில் அசாத்தியமாயும் முடியும். இந்நோயையும் மாற்றுவதற்கு எவ்வளவுக்கு முந்துகிறார்களோ அவ்வளவுக்கு நல்லது. எங்கள் சாதியார் எவ்வகையான விக்கினங்களையும் சகிக்கும் தன்மையுடையவர்களானமையினால் நோய் உண்டானாலும் அதைச்சகித்துக் கொண்டிருப்பது வழக்கம். இனிச் சகிக்க முடியாதென்ற பின்புதான் வைத்தியனிடம் ஓடுவார்கள். இந்த விஷயத்தில் இப்படிப் பொறுத்துக் கொண்டிருத்தல் பெருமதியாகமை.

இந்நோயை மாற்றுவது பிரதானமாய் மருந்தினாலல்ல; நோயாளியை பராபரிக்கும் விதத்திலேயே தங்கியிருக்கிறது. இந்நோயாளிக்கு மூன்றுகாரியங்கள் அவசியம் தேவையானவை. முதலாவது சுத்தமான காற்றும் வெளிச்சமும், இரண்டாவது பூரணமான ஆறுதல், மூன்றாவது போசனம்

நம்நாட்டிலே பொதுவான சனங்கள் அறிவாமையினாற் சுத்தமான காற்றைப் பற்றி அக்கறை எடுக்கிறதில்லை. இது சுகாதாரத்திற்கு மாறான செய்கை. காற்றிலேதான் எங்கள் சீவன் தங்கியிருக்கிறது. ஒரு நிமிஷமாகுதல் காற்றில்லாது சீவிக்கமுடியாது. சுகமானவர்களுக்கே சுத்தமான காற்று அவசியம்வேண்டுமானால் நோயாளிகளுக்கு எவ்வளவு அவசியம் வேண்டும். அதிலும் சுவாசப்பைகளையே இருப்பிடமாய்க் கொண்டநோயாளிகளுக்கு இன்னும் எவ்வளவு அவசியம் வேண்டும். ஆகையால் நோயாளியை நல்ல காற்றும் வெளிச்சமும் வரக்கூடிய அறையில் வைத்திருத்தல் வேண்டும். அறை நல்ல சுத்தமானதாயும், ஈரமற்றதாயும், போதிய யன்னல்களுள்ளதாயும் அனுவசியகமான தளபாடங்களற்றதாயும் இருத்தல்வேண்டும். அறைக்குள் நோயாளியும் நோயாளியை பராபரிக்கிற ஆளுமேயொழிய மற்றவர்கள் அனுவசியகமாய் உட்சென்று நோயாளியைச் சூழவர இருந்து நோயாளி சுவாசிக்கும் காற்றை அசுத்தப்படுத்தல் கூடாத செய்கை. நோயாளியைப் பார்க்க விரும்புகிறவர்கள் ஒருவரொருவராய் போய்ப் பார்த்து வரலாம். அப்படியில்லாது கூட்டமாய் உட்சென்று சூழவிருந்து பார்த்தல் சுகாதாரவிதிக்கு நேர் விரோதமான செய்கை. இவர்கள் நோயாளிக்கு நன்மை செய்வதிற்குப் பதிலாய்த் தீமையைச் செய்கிறார்கள்.

இந்நோயில் ஒரு அபாயமான குணமென்னவென்றால் சடுதியாய் இரத்தாசயம் களைத்து நிற்றலே. இதனாலேதான் நியூமோனியா வருத்தக்காரர் அதிகமாய் மரணிப்பது. தேகத்திலே எல்லா அவயவங்களுக்கும் நாள்தோறும் போதிய ஆறுதலுண்டு ஆனால் இரத்தாசயத்திற்கு மாத்திரம், இரத்தாசயம் பூரணமாயுண்டான காலம் தொடக்கம் மனிதன் இறக்கும் வரைக்கும் ஆறுதல் ஒரு செக்கனுக்காவது கிடையாது. ஒவ்வொரு கணமும் இரத்தத்தைப் பம்பண்ணிக்கொண்டேயிருக்கிறது. இப்படி எங்களுக்கு இன்றியமையாத இரத்தாசயத்திற்கு நாம் வருத்தமாயிருக்கும் பொழுது கடுமையான வேலையைக் கொடுக்க ஒருபொழுதும் எத்தனிக்கக் கூடாது. நியூமோனியா உண்டான காலத்தில் அது செய்யும் கடுமையான வேலையை இரத்தாசயமொருபொழுதும் அறிந்திராது இப்படியாய் இரத்தாசயத்தின் நிலை இருக்க அதற்கு இன்னமும் வேலையைக் கொடுத்தால் கெதியில் களைத்துத் தொழிலைச் செய்ய இயக்கமற்று நின்றுவிடும். ஆகையால் இந்நோயாளியைப் படுக்கையிலேயே வைத்திருத்தல்வேண்டும். ஒருபொழுதும் படுக்கையை விட்டெழும்பி நடக்க விடக் கூடாது. மலசலம் கழிக்கும் பொழுது பாத்திரங்களைக் கொடுத்துப் படுக்கையிலேயே எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். துப்புகிறதாயிருந்தாலும் துப்பற்பாத்திரத்தை பராபரிக்கிறவர்களே எடுத்துத் துப்பலைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும். நோயாளி படுக்கையிலே இருந்து கொண்டு எவ்வகையான வேலையையும் செய்ய விடக்கூடாது. ஒருபக்கத்திலேயிருந்து மற்றப்பக்கத்திற்குப் புரண்டு படுக்கிறதாயிருந்தாலும் இன்னொருவர்புரட்டி விடவேண்டும். இருக்கும் பொழுதும் படுக்கும் பொழுதும் சாய்ந்து கொண்டிருக்கவும் படுக்கவும் வைத்தல் மிகவும் உத்தமம். இது அவர்களுக்குச் சுகமாயும் மூச்சு விடுகிறதற்கு இலகுவாயுமிருக்கும். நோயாளியின் ஆறுதலை மற்றவர்கள் பக்கத்திலே இருந்து உரத்துப்பேசி அல்லது அழுது அல்லது வேறெவ்வகையாயும் குழப்பக் கூடாது. நித்திரையாயிருக்கும் பொழுது நோயாளி நேரத்துக்குநேரம் மருந்து சாப்பிட வேண்டுமென்று ஒரு பொழுது மெழுப்பக் கூடாது. ஒருநோயாளிக்கு மருந்திலும் பார்க்கத் தேவையானது நித்திரையே. அடிக்கடி தாரைதாரையாய் வெயர்க்கும்பொழுது வெயர்வையை ஒருவெள்ளைத் துணியால் ஒத்திஒத்தி எடுத்தல்வேண்டும். உடைகள் வெயர்வையால் நனைந்தால் உடனே மாற்றிப்போட வேண்டும்.

ஒரு வெள்ளை வஸ்திரத்தை, 'சிறுத்துவாலை யென்றால் மிகவும் நல்லது) சிகச்சூடான வெந்நீரில் நனைத்து இறுகப் பிழிந்து அத்துணியால் முகத்தையும் தேகத்தையும் சுத்திசெய்யலாம். இப்படியே நாக்கையும், பற்களையும் சொண்டுகளையும் மெதுவாய்த் துடைத்துச் சுத்தி செய்யலாம். துடைக்கும் வஸ்திரத்தில் தண்ணீர் அதிகம் செறிந்திருக்கக்கூடாது. துடைக்கும்பொழுது எல்லாப்பகுதிகளையும் ஒரே முறையில் துடைக்கக்கூடாது. ஒவ்வொரு பகுதியாய்த் துடைத்துப் பின் காய்ந்த வஸ்திரத்தால் உடனே உலர்த்திப்போட வேண்டும். இப்படித் துடைக்குபொழுது தேகத்திலே குளிர் பிடிக்கவிடாது அதிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

நோயாளிகளை ஒரு பொழுதும் பட்டினி போடக்கூடாது. அவர்களுக்கு நேரத்திற்கு நேரம் இலகுவாய்ச் சமிக்கக்கூடிய பதார்த்தங்களைக் கொடுத்து வரல்வேண்டும். இந்நோய்களுக்குப் பசுப்பால், முலைப்பால், மெல்லிய கஞ்சித்தெளிவு, வாளிஅரிசித் தண்ணீர் இவற்றைக்கொடுத்து வரலாம்.

ஒருநாளைக்கு இரண்டு போத்தல் பசுப்பாலுக்கு (40 அவுன்ஸ்) குறையாமல் கொடுத்து வரல் வேண்டும். இது நோயாளிக்கு மருந்திலும் பார்க்க அவசரந் தேவையானது. பாலை வாளியரிசித் தண்ணீரோடு கலந்து கொடுத்தல் உத்தமம், உவாந்தியிருந்தால் கரண்டிக்கணக்காய் அடிக்கடி கொடுத்தல் வேண்டும். நோயாளி அவாவாய்த் தண்ணீர் கேட்டால் நல்ல சுத்தமான சுடு சலத்தைக் கொடுக்க ஒருபொழுதும் பின்னிற்கத் தேவையில்லை. "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்"சென்பார்கள். ஆனால் குடிக்கும் தண்ணீருக்கும் சுவாசிக்கும் காற்றிற்கும் இம்முதுமொழி பொருந்தாது. ஒருவன் எவ்வளவுக்குச் சுத்தமான காற்றையும் சுத்தமான சலத்தையும் சாப்பிட்டாலும் அவ்வளவுக்கு அமிர்தமாயேயிருக்கும். இதனால் 24 மணித்தியாலமும் தண்ணீரையே குடிக்கவேண்டுமென்பதல்லவர்த்தம் மற்றைய பதார்த்தங்களும் தேகத்திற்கு இன்றியமையாதிருப்பதால் பாலைக்குடிக்க விருப்பப்படாவிட்டாலும் வில்லங்கப்படுத்தியாவது 24 மணித்தியாலத்திற்குள் 40 அவுன்சு பாலுக்குக் குறையாது உள்ளே செலுத்திப்போட வேண்டும். பாலோடு சோடாத்தண்ணீர் சேர்த்தும் கொடுக்கலாம்.

இந் நோயாளிகளுக்கு சடுதியாய்ச் சோசம் (Collapse) வருவதுவழக்கம். அப்படி வந்தால் நோயாளியை நல்ல சூடாய்க் கம்பளியால் போர்த்து வைத்திருத்தல் வேண்டும். போதிய சூட்டைக் கொடுப்பதற்காய் இதற்கென்று செய்யப்பட்டு விலைப்படும் றப்பர் சுடுதண்ணீர் போத்தல்களைச் சுடுதண்ணீரால் நிரப்பி அக்க பக்கங்களுக்கு தேகத்தைச் சூடு அள்ளாவண்ணம் வைத்தல் வேண்டும் இது எல்லாருக்கும் கிட்டுமென்று நான் நினைக்கவில்லை. வைத்தியருக்கு உடனே இச் செய்தியைத் தெரிவித்தல் வேண்டும். ஒரு நிமிஷமாகுதல் பிந்தக் கூடாது.

S. M.

அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
(H. 21) வண்ணார்பண்ணை.

திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

1 தெ ஜோடிப்பு 1க்கு ரூபா 4 அணா 8
2 தெ ,, ,, ரூபா 3 அணா 4
3 தெ ,, ,, ரூபா 2 அணா 8

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"மில்க் ஹவுஸ்" காசி.
(Y. 20)

விளம்பரம்.

பத்தாம் நம்பர் றெமிங்ரன் ரைப்றைற்றரொன்றும் மொனுக் ரைப்றைற்றரொன்றும் ரோனியோ ஒன்றும் ஒரு அவுன்சு முதல் இருநூற்றி நாற்பது றாத்தல் வரைக்கும் நிறுக்கக் கூடிய தராசொன்றும் என்னிடம் விற்பனைக்கிருக்கின்றது. தேவையானோர்கள் நேரில்வந்துபார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

க. பொன்னம்பலம்,
சேணியதெரு.
(Mis. 433). யாழ்ப்பாணம்.

"சுதேசி".

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை, பத்திராதிபர், பி. கோதண்டராமன் எம். ஏ. பி எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம.

வருட சந்தா ரூபா 7.
6 மாதச் சந்தா ரூ 3 அணா 12
3 மாதச் சந்தா ரூ 2
1 மாத சந்தா ரூ. அணா 11

14, வாணியா தெரு,
சென்னை.

"லோகோபகாரி".

30-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன்ஆசிரியராகவும் அதிபராகவும் இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷசந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா 6. மாதிரிப்பிரதி இனாம்

காரியஸ்தர், "லோகோபகாரி"
சோமஸேஸ்வரன் பேட்டை, சென்னை.

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு 4-0-0
20 பில்ஸ் ரு 2. வி. பீ. சார்ஜ் வேறு

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வாராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q 41 வைத்.) தியாசாலை, பழனி. S. I

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.